கட்டப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்ட பிறகாவது மின் ஒளி விளக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்படுமா? விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விளக்கு இப்போது எரிந்து கொண்டிருக்கிறது. நான் விசாரித்து பார்த்து விட்டு இதைச் சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: மூன்று நாட்களுக்கு முன்பு பார்த்து விட்டு வந்து சொல்கிறேன். விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால் கழகத் தோழர்கள் ஒவ்வொரு நாளும் அண்ணாவின் ஜோதி ஏந்திக் கொண்டு மாலை 6 மணி முதல் 10 மணி வரை நிற்க வேண்டும் என்று முடிவெடுத்திருப்பதனால் அதைப்பார்ப் பதற்காக நான் அங்கே சென்று பார்த்தேன். அங்கு விளக்குகள் எரியவில்லை. இனிமேலாவது விளக்குகள் எரிவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எதிர்க் கட்சித் தலைவர் வேண்டுமானால் இன்று இரவு போய்ப் பார்க்கலாம்.

(4) தகவல்கள் கோரல்.

(அ) முதலமைச்சர் மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் பிரச்சினை. 184-வது விதியின் கீழ் திரு. ஜேம்ஸ் அவர்களும் பின்னர் திரு எம். ஏ. லத்தீப் அவர்களும் முதலமைச்சர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று அனுமதி கேட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இல்லாத தினால் இன்றைக்கு எடுத்துக் கொள்வதில் பயன் இல்லை. அவர் கள் வருகின்ற நேரத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித் துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: முதலமைச்சர் அவர்கள் எப்போது வருவார் என்பது எங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தான் தெரியும். ஆகவே எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டால் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வியாழக்கிழமை காலை எடுத்துக் கொள்கிறேன். இல்லையென்றால் அவர்கள் சார்பில் யாராவது ஒரு அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

<u>மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டு அது வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்போவதாகவும் தாங்கள் சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் 21-ந் தேதி சென்னையில் இல்லை. நெல்லையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதாக இருக்கிறார்கள். வேறு ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம். அதாவது 31-ந் தேதி வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் வியாழக் கிழமை என்று சொன்ன பொழுது முதலமைச்சர் இல்லை, அவர் சார்பில் மற்றொரு அமைச்சர் பொறுப்பேற்று பதில் சொல்லலாம் என்று சொன்னேன். 1979ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10ஆம் நாள் அன்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் . . . .

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினை முதலமைச்சரைப் பற்றியது. ஆகவே இந்தப் பிரச்சினையில் அவர்களே ஒரு விளக்கம் கொடுத்தால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் என்றைக்கு இருக்கின்றார்களோ அன்றைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

<u>(3) உரிமைப் பிரச்னைகள்—தொடர்ச்சி.</u>

<u>(இ) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாளன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். இது குறித்து என் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தேன்.

1979ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 9ஆம் நாளன்று பேரவையில் ஒரு சட்ட முன்வடிவின் மீது பேசுகையில் திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் ''நேற்று எங்கள் தலைவர் அவர்கள் உளி வீச்சு பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்'' என்று பேசினார்கள். அப்போது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறுக்கிட்டு ''உளி வீச்சுக்கும் இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம், உட்காருங்கள்'' என்று கூறினார். பிறகும் திரு. கலியமூர்த்தி அவர்கள் ''அதற்கு அமைச்சர் அவர்கள் இன்று வரையில் விளக்கம் கொடுக்கவில்லை. செபாஸ்டியன் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் இருப்பதாக சொன்னார்கள். அதைப்பற்றித் தெரியப்படுத்தவில்லை. அதை நான்